<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ம் ஆண்டு ஜீன் மாதம் 10–ம் நாள் திங்கள்கிழமை

<u>இடைநிலை மனுஎண்.5/2022</u>

இன்

<u>அசல் வழக்கு எண்.25/2022</u>

1. ரத்தினவேல்
2. அழகம்மாள் ....மனுதாரர்கள் /வாதிகள்

/எதிர்/

1. மருதை
2. கஸ்தூரி
3. ரமேஷ்
4. ஜெயலட்சுமி
5. கந்தசாமி
6. திரு. கிராமநிர்வாக அலுவலர் அவர்கள்
   தேவையூர் கிராமம்
7. வருவாய் வட்டாச்சியர் அவர்கள்
   வேப்பந்தட்டை
8. திரு. கோட்டாச்சியார் அவர்கள்
   பெரம்பலூர்
9. மாவட்ட ஆட்சியார் அவர்கள்
   பெரம்பலூர்
10. சார்பதிவாளர் அவர்கள்,
   வாலிகண்டபுரம் கிராமம்
11. பஞ்சாயத்து போர்டு தலைவர் அவர்கள்,
   தேவையூர் கிராமம் ...எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 06.04.2024–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. E. இராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4, 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. அருணன் அவர்கள் ஆஜராகியும், 3, 6 முதல் 11ம் எதிர்மனுதாரர்கள் தோன்றதரப்பினர் ஆகிவிட்ட நிலையிலும், இரு தரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் மனுவினை ஏற்று வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து அவர் நில அளவையர் உதவியுடன் தாவா சொத்தை

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:48:20 +0530

பார்வையிட்டு நில அளவை செய்து ஒரு வரைபடமும், அறிக்கையும் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையருக்கு உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 26, விதி 9–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>

2) அசல் வழக்கில் மனுதாரர் வாதி என்றும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை உறுத்து கட்டளை பரிகாரத்திற்காகவும் மனு தாக்கல் செய்துள்ளதாகவும், தாவா சர்வே எண்.372/30ல் பழைய சரவே எண்251/1–ல் கட்டுப்பட்ட சொத்தை 3 தாக்குகளாக காட்டி 09.07.1997ம் தேதி அண்ணாமலை உடையார் வகையறாவிடம் இருந்து சரியான பிரதி பிரயோஜனத்திற்கும் சரியான நான்கெல்லை காட்டி முறைப்படி எழுதப்பட்டு சட்டப்படி பதிவு செய்த கிரைய பத்திரம் மூலம் கிரையம் பெற்று மனுதாரர் தனித்த உரிமையில் இருந்து வருகிறார் என்றும், கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் சர்வே எண்372/30ல் கண்ட 3வது தாக்கு மனைக்கு தென்புறமும் 1வது தாக்கு மனைக்கும் கீழ்புறமும் உள்ள சர்வே எண்372/31 மற்றும் 372/32 கண்ட சொத்து மனுதாரரின் தகப்பனார் ராமசாமிக்கம் அவரது சகோதரர்கள் பரமசிவம் மற்றும் கிருஷ்ணசாமியும் வாய்கரவாக பாகம் செய்துக்கொண்டதில் மேல்புறம் மனுதாரரின் தகப்பனாருக்கு சர்வே எண் 372/31–ல் கண்ட சொத்தும் சர்வே எண் 372/32ல் கண்ட சொத்தில் மேல் புறம் பரமசிவத்திற்கும் கீழ்புறம் கிருஷ்ணசாமிக்கும் ஒதுக்கப்பட்டு அவரவர்கள் பாக சொத்தை அவரவர்கள் அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றும், பரமசிவத்திற்கு பாத்தியப்பட்ட பாக சொதது வரிசுப்படி அவரது மகள் 4ம் பிரதிவாதி ஜெயலட்சுமிக்கு கிடைத்தும் கிருஷ்ணசாமியின் பாகத்தை 4ம் பிரதிவாதி ஜெயலட்சுமி கிரையம் பெற்றும் மேற்படி இரு பாகத்தையும் சேர்த்து சர்வே எண்.372/32 என உட்பிரிவு செய்யப்பட்டு மேற்படி 4ம் பிரதிவாதி அனுபவித்து வந்தார் என்றும், தனக்கு பாத்தியப்பட்ட சர்வே எண்.372/31ல் கண்ட பூர்வீக சொத்தில் வீடு கட்டும் போது தான் கிரையம் பெற்ற தாவா சர்வே எண்.372/30–ல் தென்புறத்தில் கொஞ்சம் சேர்த்து நீட்டி செட் போட்டு குடியிருந்து வருகிறேன் என்றும், தாவா சர்வே எண்.372/30–ல் கண்ட மீதி சொத்தில் ஆடு மாடு கட்டி பட்டியாகவும் அனுபவித்து வருவதாகவும், தனக்கும் தனது மனைவிக்கம் கருத்துவேறுபாடு காரணமாக மேற்படி சர்வே எண்ணில் கீழ்புறம் பாதியை

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:48:28 +0530

2ம் வாதியாகிய தன் மனைவிக்க ஆயுள் ஜீவனத்திற்காக வாய்கரவாக தானமாக 2ம் வாதிக்கு கொடுத்துவிட்டார் என்றும், 2ம் வாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை அனுசரித்து தாவா சர்வே எண்.372/30 சொத்தின் கீழ்புறம் பாதியை பொருத்து அரசு HSD 613/1407–நாள் 03.10.1997ம் தேதி 2ம் வாதிக்க அடமான பட்டா வழங்கியுள்ளது என்றும், 4ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சர்வேஎண்.372/32ல் கண்ட சொத்தை 5ம் பிரதிவாதி 18.05.2017ம் தேதி 3ம் பிரதிவாதிக்கு மோசடியாக கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், 3ம் பிரதிவாதி கிரையம் பெற்ற 372/32 சொத்திற்கு வடபுறம் தங்களுக்கு பாத்தியப்பட்ட தாவா ச.எண்372/30–ல் கண்ட சொத்து மட்டும்தான் உள்ளது என்றும், மேலும் 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவரிடமிருந்து ச.எண்.372/32ல் கண்ட சொத்தை 14.06.2021ம் தேதி கிரையபத்திரம் எழுதிக் வாங்கிக்கொண்டதாகவும், மேற்படி சொத்திற்கு வடபுறம் 2வது தாக்கு மனையை சேர்த்து கிரையம் பெற்றள்ளதாகவும் சொல்லிக்கொண்டு தாவா சொத்தில் மெத்தை வீடு கட்டப் போவதாக 1,2 ம் பிரதிவாதிகள் தாவா சொத்தை சுத்தம் செய்தார்கள் என்றும், அதை வாதிகள் தடுத்து நிறுத்திவிட்டதாகவும், அதனால் தாவா சர்வே எண்.372/30ல் பழைய ச.எண்.251/1–ல் கட்டுப்பட்ட சொத்தை 3 தாக்குகளாக காட்டி 09.07.1997ம் தேதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் கண்ட 3வது தாக்கை அளக்கவும், எதிர்மனுதாரர்/ பிரதிவாதியின் செயல்களுக்கு முடிவு கட்டவும், தாவா சொத்தின் நில அமைப்பை தெரிந்து கொள்ளவும் சமூகம் நீதிமன்றத்தின் மூலம் வழக்கறிஞர் ஒருவரை நீதிமன்ற ஆணையராக நியமித்து தாவா சொத்தின் வரைபடத்துடன் கூடிய ஒரு அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு நீதிமன்ற ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

3)மனுதாரர் கூறிய சங்கதிகளை மறுத்தும், 2ம் மனுதாரர் ஒருக்காலும் தாவா சர்வே எண். 372/20ன் கீழ்புற பாதியை அனுபவிக்கவில்லை என்றும், 2ம் மனுதாரர் பெயரில் அரசு வழங்கிய பட்டா 1ம் மனுதாரரால் உண்மையை மறைத்து வருவாய் துறையினர் மூலம் பெறப்பட்ட பட்டா என்றும், 1997ல் வழங்கப்பட்ட பட்டாவின்படி எவ்வித வீடும் கட்டாததால் 2ம் மனுதாரர் பெயரில் மேசடியாக பெற்றுக் கொண்ட அடமான உத்தரவு காலாவதியாகிவிட்டது என்றும், மேலும் தாவா சொத்து விவரத்தில்

S P PARVADHRAJ ARUMUGAM

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:48:35 +0530

காட்டியுள்ள சொத்துக்களில் பரமசிவ இடையார் மகள் ஜெயலட்சுமியின் கணவர் கந்தசாமிக்கு தானமாக கொடுத்துள்ளார் என்றும், அதனைதான் அனுபவித்து வந்த மேற்படி கந்தசாமி எதிர் மனுதாரருக்கு தானமாக கிடைத்த மற்றும் பூர்விகமாக சொத்தை மாமனார் அனுபவித்து வந்த சொத்தையும், 3ம் பிரதிவாதி மருதபிள்ளை உடையார் மகன் ரமேஷ் என்பவருக்கு 18.05.2047ம் தேதி கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், இவ்வாறு கிரையம் பெற்ற பின்னர் 3ம் பிரதிவாதி ரமேஷ் தன் பூர்வீகமாக அனுபவித்து வந்த சொத்து மற்றும் கிரையம் பெற்ற சொத்தில் கிழமேல் 10 அடி, தென்வடல் 10 அடி கொண்ட 100 சதுர அடியில் செங்கல் சுவர் கட்டி வீட்டு வரி செலுத்தி மேற்படி சொத்தை அனுபவித்து வந்தார் என்றும், இதனை கடந்த 14.06.2021ம் தேதி 3ம் பிரதிவாதி ரமேஷ் என்பவரின் பொது அதிகார முகவரான 3ம் பிரதிவாதி ரமேஷ் மனைவி சுகன்யா 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றும், எதிர்மனுதார்கள் பெயரில் வழங்கப்பட்ட பட்டா மற்றும் கிரைய முன்னவர்களுக்கு வழங்கப்பட்ட பட்டா முழுமையான விசாரணைக்கு பின்னர் பிரதிவாதிகளின் அனுபவத்தால் வழங்கப்பட்டது என்றும், எனவே மனுதாரரின் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

5) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

"மனுதாரர்கள் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா?" என்பதேயாகும்.

<u>தீர்வு</u>

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக விளம்புகை மற்றும் அதன் தொடர்ச்சியாக நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 24.03.2022ம் தேதி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மனுவில் கோரியுள்ள நீதிமன்ற ஆணையரை நியமித்து தாவா சொத்தின் பூஸ்துதியை அறிக்கையுடன் தாக்கல் செய்ய வேண்டும் என்பதை ஆராய்கையில் எதிர்மனுதாரர்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:48:47 +0530

தரப்பில் வழக்கு சொத்தில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், வாதி கூறியபோடி தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் பிரதிவாதிகளால் செய்யப்படவில்லை என்று கூறியுள்ளதும், எதிருரை தாக்கல் செய்துள்ளதும் கருத்தில் கொண்டு ஆராய்கையில், இது குறித்து உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு–75 எவ்வாறான செயல்களுக்கெல்லாம் நீதிமன்றம் ஆணையரை நியமிக்கும் அதிகாரம் பெற்றுள்ளது என்பது பற்றி கூறுகிறது. அதன்படி CPC Section–75, Power of Court to issue commissions– Subject to such conditions and limitations as may be prescribed, the Court may issue a commission–

(a) to examine any person;

(b) to make a local investigation;

(c) to examine or adjust accounts; or

(d) to make a partition;

(e) to hold a scientific, technical, or expert investigation;

(f) to conduct sale of property which is subject to speedy and natural decay and which is in the custody of the Court pending the determination of the suit;

(g) to perform any ministerial act.

என்று கூறியுள்ளது.

7) மேற்படி பிரிவின் உட்கூறுகளை கருத்தில் கொண்டு ஆராய்கையில் இம்மனுவிலும், அசல் வழக்குரையிலும் தாவா சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் பிரதிவாதி செய்ததாக சொல்லப்படாத நிலையிலும், தாவா சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அவர்களுக்கு இடம் இருப்பதாக கூறி ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்து வருகிறார்கள் என்றும், வாதி தன் தரப்பு வழக்கை நிரூபிக்க தாவா சொத்தை நீதிமன்ற ஆணையரால் அதன் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்யவேண்டுமென்று காரணமாக கூறியுள்ளதும், எந்த காரணத்திற்காக ஆணையரை நியமிக்க வேண்டுமென்று மனுவில் காரணமாக தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் அத்துமீறி நுழைந்து கட்டிடம் கட்ட ஏற்பாடு செய்து வருவதாகவும் அதனால் 09.07.1997ம் தேதி 1ம் வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் கண்ட 3வது தாக்கை நில அளவையர் மூலம் அளந்து அத்து நிர்ணயம்

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:48:56 +0530

செய்து அதன் பூஸ்துதியை அளவை அறிய நீதிமன்ற ஆணையரை நியமிக்க வேண்டுமென்று கோரியுள்ளது, தெரிய வருகிற நிலையில், மேற்படி காரணம் முற்றிலும் ஏற்கதக்கது அல்ல என்றும், அதனை தகுந்த ஆவணங்களின் மூலம் வாதி நிரூபிக்கமுடியும் என்றும், இந்நீதிமன்றம் கருதியும், மேலும் அசல் வழக்கில் மனுதாரர்கள் தாவா சொத்தை பொருத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தையும் ஒரு பரிகாரமாக கோரியுள்ளதாலும், தாவா சொத்து மனுதாரர்களின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதை போதுமான சாட்சிய, சான்றாவணங்களின் மூலமே நிரூபிக்க முடியும் என்பதாலும், தாவா சொத்தில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறாமல் செய்ய முயற்சித்ததாகவும் அதனை தடுத்து விட்டதாகவும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டு கூறியுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையரை நியமித்து, ஆணையர் அறிக்கை மூலம்தான் வாதி தனது வழக்கை நிரூபிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் நீதிமன்ற ஆணையர் மூலம் சாட்சியங்களை சேகரிக்கக் கூடாது என்று பல்வேறு வழக்குகளில் மாண்புமிகு உயர்நீதிமன்றமும் மற்றும் மாண்புமிகு உச்சநீதி மன்றமும் அறிவுறித்தியுள்ள நிலையில் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமித்தால் அது வாதிகள் தன் தரப்பு வழக்கிற்கு சாட்சியங்களை சேகரிப்பதாகவே அமைந்து விடும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) மேலும் மாண்புமிகு உயர்நீதிமன்றம் CRP(PD) (MD) No.970 of 2012 and MP (MD) NO.1 of 2012 என்ற வழக்கில் AIR 1996 Kar 257 Puttappa Vs Ramappa என்ற முன்தீர்ப்புரையின் மூன்றாம் பத்தியில் கூறியுள்ளதை சுட்டிகாட்டியுள்ளது. அதன்படி "a Commissioner cannot be appointed to find out as to who is in possession of the property. Under Order 26. C.P.C., a Commissioner can be appointed to make local investigation to investigate the facts or other materials which are found in the property and to make a report in regard to that matter to the Court. In a suit for injunction the question as to who is in possession of the property, is a matter to be decided by the Court on the basis of the evidence, either oral or documentary, to be adduced by the parties. That function cannot be delegated to a Commissioner who cannot find out as to who is in possession of the property. Accordingly, the lower Court was right in rejecting the Application." என்று கூறியுள்ளது தெரிய வருகிறது. இவ்வழக்கில் மனுதாரர் தாவா

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:49:04 +0530

சொத்தானது தனது உரிமையில் உள்ளது என்பதை ஆவணங்கள் மூலம் நிரூபிக்க முடியும் என்றும், மனுவில் கண்டுள்ள காரணம் மனுவை அனுமதிக்க தகுந்த காரணம் இல்லை என்றும், மேலும் மேற்படி முன்தீர்ப்புரை இவ்வழக்கின் சங்கதிகளுக்கு பொருந்தி வருவதாக இந்நீதிமன்றம் கருதியும் மனுவில் கூறியுள்ள காரணங்கள் மனுவை அனுமதிக்க போதுமான காரணங்கள் இல்லை என்றும், மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையிலும், மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்று கருதி செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு ஜீன் மாதம் 10 ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:49:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

S P PARVADHRAJ ARUMUGAM
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by S P PARVADHRAJ ARUMUGAM
Location: VEPPANTHATTAI
Date: 2024.06.10 18:49:15 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.